பதிவு எண் : ம. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம் நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : புரட்டாசி 5உ (21—9—67) வியாழன் ★ வெளியூர் : புரட்டாசி 6உ (22—9—67) வெள்ளி [இதழ் : 83

'மகாத்மா காந்தியை நினைவுபடுத்துகிறார் அண்ணா'

'அவருக்குத் தலைமை தாங்க எனக்குத் தகுதியில்லை'

சர்வோதயத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணன் புகழ்மாலை

சென்னை, செப். 29—

"முதலமைச்சர் அண்ணாதுரை சொன்ன கருத்து, மகாத்மா காந்தியை எனக்கு நினைவுபடுத்தியது."

"முதலமைச்சர் அண்ணாதுரை போன்ற அரசியல் தலைவர்கட்கு நான் தலைமைதாங்க இயலாது"

என்று, சர்வோதய இயக்கத் தலைவர் திரு ஜெயப்பிரகாஷ் நாராயணன், இன்று இங்கு ஒரு விழாவில் குறிப்பிட்டார்.

பீகார் மாநில வறட்சித் துயர் துடைப்பு நிதியளிப்பு விழா இன்று மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்றது.

சென்னை நகர ஷெரீப்பும் பீகார் துயர் துடைப்பு நிதிக் குழுச் செயலாளருமான திரு. பி. மருதை பிள்ளை அனைவரையும் வரவேற்றார்.

நிதிக் குழுவினரால் திரட்டப்பட்ட ரூ. 1,20,450 ரூபாயை முதலமைச்சர் அண்ணா அவர்கள், ஜெயப்பிரகாசரிடம் வழங்கினார்கள்.

அண்ணா அவர்கள் நிதியளித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"ஜெயப்பிரகாசரை நம்முன் அழைத்து இத்தொகையினை அளித்திடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்தத் தொகை இன்னும் பன்மடங்கு அதிகமாக இருந்திருந்தால், எனது மகிழ்ச்சியும் அதிகரித்திருக்கும். தமிழகத்தில் உள்ள நமக்கே பல நெருக்கடிகள் இருக்கின்றன; இருப்பினும், பீகார் மக்களின் தேவைக்கேற்பவோ தமிழகத்தின் கொடைப் பாரம்பரியத்துக்கு ஒப்பவோ இத்தொகை இல்லை!

இத்தொகை சிறிதே எனினும், மாந்தர்குலம் போற்றிடுகின்ற 'நல்லெண்ணம்' என்கிற பேழையில் வைத்து இதனை அளிக்கிறோம்!

நாட்டின் நல்ல பல தலைவர்களை ஈன்ற மாநிலம் பீகார்; வறட்சியோ வெள்ளமோ அம்மாநிலத்து மக்களை ஏதும் செய்துவிடாது; அவர்கள் துயர் துடைக்கப்பட்டு, மறுவாழ்வு பெறுவார்கள்!

அதிகாரப் பற்றற்ற நிவாரணக் குழுக்களுக்கெல்லாம் நிரந்தரத் தலைவராக விளங்குகிறார் ஜெயப்பிரகாஷ்நாராயணன்; நாட்டில் எங்கு மக்களுக்குப் பெருந் துன்பம் நேர்ந்தாலும், என் போன்றவர்கள் அவரை நினைத்துக் கொள்கின்றோம்.

'தனி மனிதன்' என்கிற முறையில், ஜெயப்பிரகாஷ் போன்ற ஒரு தலைவரின்கீழ் பணிபுரியவே விரும்புவேன். ஆனால், அவர் அரசியலில் இல்லை; அவர், அரசியலை ஏன் துறந்தார் என்பதற்கான காரணங்களை நான் உணருகிறேன்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பீகார் மக்களுக்கு மறுவாழ்வு கிடைக்கச் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள அவர், இந்நாட்டில் சனநாயகத்துக்கும் கண்ணியத்துக்கும் மறு மாழ்வு கிடைத்திடச் செய்யவேண்டும்.

ஜெயப்பிரகாஷ்நாராயணனை நான், இந்நாட்டின் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தத்தக்க உறுதியான தலைவராகக் கருதுகிறேன். நல்லெண்ணத் தூதுவராக அவரை நான் வரவேற்கிறேன்.

டில்லி செங்கோட்டையில் அவர் அதிகாரத்தில் 'இல்லை—சாதாரண மக்கள் மத்தியில் நிற்கிறார்! அங்கிருந்தபடியே அவர் தன் மக்கள் பணியைத் தொடருகிறார்!

என்னை அவர் ஓர் நண்பனாக—தன் அபிமானியாகக் கருதலாம். ஏன்—அவரது சீரிய பணியில் -- தொண்டில் அவருக்கு ஓர் சீடனாகவும் நான் இருந்திடுவேன்."

ஜெயப்பிரகாஷ் நாராயணன்

நிதி அளித்தமைக்கு நன்றி கூறி ஜெயப்பிரகாஷ் நாராயணன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"முதலமைச்சரின் அன்பு மொழிகள் என்னை சங்கடத்தில் ஆழ்த்திவிட்டன! அவர் கூறிய அந்த உயர்ந்த நிலையில் நான் இல்லை!

அவர் என்னிடத்தில் அதிகம் எதிர்பார்க்கிறார். அவர் கொண்டுள்ள நம்பிக்கையை நிறைவேற்றக்கூடிய ஆற்றலற்ற எளியவனாக என்னை நான் கருதுகிறேன்.

நாட்டுப் பணியில் ஈடுபட்டுள்ள எளிய ஊழியன் நான்; முதலமைச்சர் அண்ணாதுரையைப் போன்ற அரசியல் தலைவர்களுக்கு நான் தலைமைதாங்க இயலாது!

முதலமைச்சர் சொன்னவற்றுள் ஒன்று எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அரசியலைத் துறந்து இருக்கிற எனது நோக்கத்தை அவர் சந்தேகிக்கவில்லை.

அதிகாரபீடத்தில் இல்லாவிட்டாலும், மக்கள் பணியாற்றுவது பற்றிக் குறிப்பிட்ட முதலமைச்சர், அது இயலுமென்றும் தெரிவித்தார். அவரது (அண்ணாவின்) இந்தக் கருத்து எனக்கு மகாத்மா காந்தியை நினைவுபடுத்துகிறது!

நம்மை நாம் ஆண்டுகொள்ள—ஆற்றல் பெறுகிற அந்நிலையில், ஆட்சி தேவைப்படாது! கார்ல் மார்க்சும், லெனினும், காந்தியும், மனிதகுலம் அத்தகைய ஒரு நிலையை எய்திட வேண்டுமென்று எண்ணினார்கள்; ஆனால், அந்த நாள் வெகு தொலைவில் இருக்கிறது; எனவே, ஆட்சி என்பது இருக்கும்!

மக்கள் எல்லாவற்றுக்கும் அரசையே நம்பியிருக்கும் நிலை கூடாது! மக்கள் தங்களுக்குத் தாங்களே உதவிக் கொள்கிற நிலை வளரவேண்டும்!

எதற்கெடுத்தாலும் அரசையே அண்டியிருக்கிற ஒரு பழக்கத்தை மக்களிடம் பரப்பிய குற்றம், படிப்பாளிகளான நடுத்தர வர்க்கத்தையே சாரும்!

தமிழகத்தில் முதலமைச்சர் திரு. அண்ணாதுரை தலைமையில் சீரணிப் படை அமைந்துள்ளது; மக்கள் தங்களுக்குத் தாங்களே உதவிக்கொள்ளும் ஆற்றலை வளர்க்கத்தக்கதாகும். இது ஒரு நல்ல முயற்சியாகும்; இதுபற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன்.

மக்களிடம் இத்தகைய ஒரு நன்முயற்சிவளர காங்கிரசு கலைக்கப்பட்டு, 'லோக சேவக் சங்கம்' என்ற பெயரில் இயங்க வேண்டுமென்று மகாத்மா காந்தி—அவர் கொல்லப்படுவதற்கு ஒரு நாளைக்குமுன்—தெரிவித்தார்.

காந்தியார் சொன்னது நிறைவேறியிருந்தால், மிகப் பெரிய புரட்சி ஒன்றையே இங்கு அவர் நிறைவேற்றியிருப்பார்! காந்தி செய்த புரட்சிக்கெல்லாம் தலையாய புரட்சியாக இது இருந்திருக்கும்!

மகாத்மா விரும்பிய இப்பணியைத்தான் சர்வோதய இயக்கத்தைச் சேர்ந்த நாங்கள் செய்து வருகிறோம்.

முதலமைச்சர் திரு. அண்ணாதுரையின் தலைமையில் சீரணிப் படை மேற்கொண்டுள்ள முயற்சிகள் வெற்றிபெறுமெனவும் நம்புகிறேன். தங்களுக்குத் தாங்களே உதவிக் கொள்ளும் ஆற்றலை மக்கள் நிரம்பப் பெற்றிருக்கிறார்கள்! அவர்களை விழிப்படையச் செய்துவிடுவோமானால், நம் மக்கள், இமயத்தையே தகர்த்துத் தவிடாக்கிவிடுவார்கள்!

திரு. அண்ணாதுரை போன்றவர்களுக்கு நான் தலைவனாக இருக்க இயலாதவன்!

மக்களின் பொது நன்மைக்காக உழைப்பதில் அவரோடு சேர்ந்து உழைக்கும் ஊழியனாக இருக்கவே நான் விரும்புகிறேன்!

'பீகார் வறட்சி நிவாரண நிதிக்குத் தாம் அளித்த தொகை குறைவு' என்று முதலமைச்சர் சொன்னார். இந்தத் தொகையின் பின்னால், உள்ள உணர்வின் மிகுதியே ஓங்கி நிற்கிறது!"

சேதுசமுத்திரத் திட்டம்

பிரச்சினைகள் மிகுந்ததாம்!

"சேது சமுத்திரத் திட்டத்தில், பொருளாதார — அரசியல்— அனைத்து நாட்டுப் பிரச்சினைகளெல்லாம் இருக்கின்றன; எனவே, தூத்துக்குடித் திட்டத்தை சேதுசமுத்திரத் திட்டத்துடன் இணைக்க நான் விரும்பவில்லை"

என்று, மத்திய போக்குவரத்து அமைச்சர் டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

'ரோமாபுரி'

பற்றி

இரா. செழியன்

மேலை நாட்டுச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள 'நம் நாடு' ஆசிரியர் இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்கள் 'ரோமாபுரி' பற்றி எழுதும் கட்டுரை (சென்னை 23—9—67) 'நம் நாடு' இதழில் இடம் பெறும்.

சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில்

அண்ணா பிறந்த நாள் விழா

(எட்டாம் நாள்)

22--9--67 இரவு 7 மணிக்கு
85-வது வட்டம் சாந்தோம் மைதானத்தில்
(ஓசியானிக் ஓட்டல் பின்புறம்)

தலைவர் : எஸ். வி. வேலு

பேசுவோர் :

பெரியார் ஈ. வெ. ரா.

குன்றக்குடி அடிகளார்

அமைச்சர்	அமைச்சர்
மு. கருணாநிதி	செ. மாதவன்
ம.பொ. சிவஞானம் எம்.எல்.ஏ.	இராம அரங்கண்ணல் எம்.எல்.ஏ.
டாக்டர் ஹண்டே எம்.எல்.ஏ.	டி. கே. கபாலி எம்.சி.
வி. முனுசாமி எம்.சி.	காஜா மொய்தீன் எம்.சி.
டி. கே. பொன்னுவேலு பி.ஏ.	பக்கிரி
நிலநாராயணன்	

பாண்டி நிலைமைகள்

தமிழகத்துக் காங்கிரசின் ஓர் 'சித்தாப்'பாக இருந்த பாண்டி அமைச்சரவை, மீண்டும் ஆட்டம் காண்கிறதாம்!

இச்செய்தி அச்சேறுவதற்கு முன்னர் அல்லது அச்சில் வந்தது படிக்கப்படுவதற்குள், அங்கு 'ஆட்டம்' முடிந்துவிட்டால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை!

சட்டமன்றத் தலைவராக இருந்து முதலமைச்சர் பதவிக்குத் தாவிய பரூக் மரைக்காயர், தனது இடைக்கால 'பெருமை'யை இழக்க இருக்கிறார்!

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் காரணமாக ஆறு மாதத்துக்குமுன் வெளியேறிய வெங்கடசுப்பா ரெட்டியாரை, காங்கிரசின் செல்வாக்குள்ள ஒரு கோஷ்டி, 'ஒதுங்கியிருந்தது போதும்; உள்ளே வாருங்கள்' என்று அழைத்திருக்கிறது!

சுற்றுப்பயணத்தை முடித்துவிட்டு ஓய்வெடுக்க வந்த காமராசர், இந்தப் புதிய 'ஊசலில்' சிக்கியிருக்கிறார்!

மரைக்காயர் மட்டும் தனியாகவும், மற்றைய அமைச்சர்கள் மொத்தமாகவும் நேற்று காமராசரைச் சந்தித்திருக்கிறார்கள். இதில் விசேடம் இல்லாமல் இல்லை!

"மரைக்காயரை மாற்றினால், கட்சியில் 'வெளியேற்றம்' இருக்காது; இல்லாவிட்டால்...?" என்ற எச்சரிக்கையைக் காமராசருக்குத் தந்துவிட்டு, சிலர், பாண்டி திரும்பியிருக்கின்றனர்!

கல்வி அமைச்சர் மாணிக்கவாசகரெட்டியார் சென்னைக்கு வரவில்லை!

இதிலும் விசேடம் இல்லாமல் இல்லை!

பரூக் மரைக்காயர் அப்புறப்படுத்தப்பட்டால், அவருக்குக் கல்வி இலாகாதான் கொடுக்கப்படுவதாக இருக்கிறதாம்!

சேப்பாக்கம் விருந்தினர் மாளிகையில் இருந்த மரைக்காயர், புதிய திருப்பத்துக்கான காரணம் எதையும் செய்தியாளருக்கு விளக்கவில்லை!

"சில குற்றச்சாட்டுக்கள் அவர் மீது தெரிவிக்கப்பட்டன; சரியான விளக்கமில்லை; எனவேதான், இந்தத் திருப்பம்" என்று, சுப்பிரமணிய படையாச்சி என்னும் மற்றோர் அமைச்சர், உண்மையை வேறோர் இடத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார்!

30 உறுப்பினர்களைக் கொண்ட பாண்டி சட்டமன்றத்தில், காங்கிரசின் பலம் பதினெட்டாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

வழக்கமாக 22-ந் தேதி நடைபெற வேண்டிய சட்டமன்றக் கூட்டம், அமைச்சரவையில் மாற்றமிருந்தால் மேலும் ஒத்தி வைக்கப்படும்.

பாண்டி – மதராஸ் வந்த வழி இது!

மதராஸ்—பாண்டி போகும் வழி என்ன என்பது இனித் தெரியும்!

—எஸ். ஆர்.

சென்னை நகரில் வாழ்க்கைச் செலவு குறைகிறது

சென்னை நகரில் தொழிலாளர் பிரிவினருக்கான வாழ்க்கைச் செலவு செப்டம்பர் 9-ந் தேதியுடன் முடிந்த வாரத்தில் ஒரு புள்ளி குறைந்து 692-ல் நின்றது.

"இறைச்சி, மிளகாய், நல்லெண்ணெய் ஆகியவற்றின் விலை இறக்கமே இதற்குக் காரணம்" என்று அரசினர் செய்தித் துறை தெரிவிக்கிறது.

நம்நாடு

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1998 புரட்டாசி 5 (21—9—67) வியாழன்

தேர்தல் குழுவின் இடித்துரை

முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றுள்ள தமிழக அரசுக்கு எதிராக மக்களைக் கிளர்ந்து எழச்செய்ய காங்கிரசுப் பெருந்தலைவர் காமராசர் அவர்கள், தாம் பயின்றுள்ள அரசியல் வித்தைகள் அனைத்தையும் கையாண்டு வருகின்றார்! புதுப்புது வசைமொழிகளைக் கழக அரசின்மீது வீசிக்கொண்டேயிருக்கின்றார் அவர்!

கழக ஆட்சிக்கு எதிராகத் தமிழக மக்களை ஏவிவிட, காமராசர் நூதனமான குற்றச்சாட்டுகளை நாள் தவறாமல் அடுக்கடுக்காகக் கூறிவருகின்றார். இப்படி, தாம் கூறுகின்ற குற்றச்சாட்டுகளுக்குப் போதிய ஆதாரம் இருக்கின்றதா—அக்குற்றச்சாட்டுகளை மக்கள் நம்ப முன்வருவார்களா என்பது பற்றியெல்லாம், அப்பெருந் தலைவர் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

எதையாவது தொடர்ந்து கூறிக்கொண்டு வந்தால், இன்றைக்கு இல்லையானாலும் நாளை—நாளைக்கு இல்லையானாலும் மறுநாள்—அல்லது என்றைக்காவது ஒருநாள்—அதை மக்கள் நம்பத்தான் செய்வர் என்ற தீர்மானத்தில், காமராசர், கழக ஆட்சியின் மீது பொருத்தமற்றதும் உண்மைக்கு மாறானதுமான குற்றச்சாட்டுகளைக் கூறிவருகின்றார் என்றுதான் முடிவு கட்ட வேண்டியிருக்கிறது.

வீரியமுள்ள பொறுக்கு விதையை விதைத்து நல்ல பலனை அடைபவருமுண்டு; ஏதோ பெயரளவுக்கு சொத்தை விதையை விதைத்துவிட்டுப் பலன் எதுவும் காணாது ஏமாற்றமடைகிறவரும் உண்டு. இந்த இரண்டாம் இனத்தைச் சேர்ந்தவரைப்போலத்தான், அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் காமராசர் அவர்களும், பொருத்தமற்றதும் அடிப்படையற்றதுமான குற்றச்சாட்டுகளைக் கழக ஆட்சி மீது சுமத்திவிட்டு, அதனால் தாம் எதிர்பார்க்கின்ற பலன் கிடைக்கப்பெறாமல் ஏமாற்றத்தைத் தழுவிக்கொண்டு வருகின்றார்; பரிதாபத்துக்குரிய அரசியல் உழவர்!

சென்ற பொதுத் தேர்தலில் காங்கிரசுக் கட்சிக்கு ஏற்பட்ட தோல்விக்குரிய காரணங்களை ஆராயும் பணியில் காமராசர் உட்பட காங்கிரசுத் தலைவர்கள் பலரும் ஈடுபட்டனர். அவர்கள் அனைவரும் அவ்வாராய்ச்சியில் தொடர்ந்து இப்பொழுதும் ஈடுபட்டுக் கொண்டுதான் இருக்கின்றனர்.

யானை கண்ட குருடர்களைப்போல், ஒவ்வொருவரும் காங்கிரசுக் கட்சி பெற்ற தேர்தல் தோல்விக்கு முரண்பட்ட பல்வேறு காரணங்களைக் கூறிவருகின்றனர். அடுத்து வரக்கூடிய பொதுத் தேர்தல் வரை அவர்கள் ஆராய்ச்சி நீடிக்கத்தான் செய்யும். தோல்விக்குரிய மேலும் பல காரணங்களை அவர்கள் இனியும் கூறத்தான் போகின்றனர்.

காங்கிரசுக் கட்சி பெற்றிருக்கின்ற தோல்விக்கு, அனைத்திந்திய மட்டத்தில் கூறுகின்ற காரணம் எதுவாக இருந்திட்டாலும், தமிழகத்தைப் பொறுத்தவரையில் தேர்தலில் காங்கிரசுக் கட்சி மண்ணைக் கவ்வியதற்கு மூலகாரணமாக இருப்பது, இருபதாண்டுக் காலமாக மக்களை மறந்து காங்கிரசு நடத்திவந்திருக்கின்ற கொடுங்கோலாட்சியே ஆகும். இக்கொடுங்கோலாட்சியைக் குறித்து விளக்கமாகவும் விரிவாகவும் தெரிந்துகொள்ள, முன்னாள் முதலமைச்சர் பொறுப்பிலிருந்தவர் கோலோச்சிய அவலட்சணம் குறித்துக் காங்கிரசுப் பெருந்தலைவரின் சீடர்கள் இதுவரை தந்துள்ள—இப்பொழுதும் தந்துகொண்டிருக்கின்ற மதிப்புரையே போதியதாகும்.

இந்தி மொழிக்கு எதிராகத் தாய்மொழியைக் காக்கத் துணிந்தவர்களில், தனது ஆட்சியில் சுட்டு வீழ்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை பற்றிய புள்ளிவிவரத்தைத்தான் முன்னைய காங்கிரசு ஆட்சியால் மறுக்க முடியுமே அல்லாது, 'எவரையும் சுட்டு வீழ்த்தவே இல்லை' எனக் கூற முடியாது. இந்தித் திணிப்புக்கு எதிராகப் புயலெனக் கிளம்பிய எதிர்ப்புணர்ச்சியை, இராணுவத்தின் உதவியைக்கொண்டல்லவா முன்னைய காங்கிரசு ஆட்சி சந்தித்திருக்கிறது?

இந்தித் திணிப்பை எதிர்த்து நின்ற தமிழ் மக்களுக்கு, துப்பாக்கியின் துணையைக்கொண்டு அன்று தீர்ப்பளித்தது காங்கிரசு ஆட்சி! துப்பாக்கியின் துணையுடன் தங்களுக்குத் தீர்ப்பளித்த காங்கிரசு ஆட்சிக்கு, 'வாக்குரிமை' என்ற வலிவுமிக்க படைக்கலன் துணை கொண்டு, தருணம் கிடைத்ததும் தமிழ் மக்கள் இறுதித் தீர்ப்பு அளித்துவிட்டனர்!

இப்பேருண்மையை உள்ளூர ஒப்புக்கொண்டாலும், வெளிப்படையாக ஒப்புக்கொள்ளக் காங்கிரசுப் பெருந்தலைவர் விரும்பவில்லை. அப்படி ஒப்புக்கொள்ளுவது தமது தனித்தன்மைக்கு இழுக்காகும் என, அப்பெருந் தலைவர் நினைத்துக்கொண்டுள்ளார்.

இதனால், தமிழகத்தில் காங்கிரசுக் கட்சி பெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் தோல்விக்கு நூற்றுக்கு நூறும் பொய்யான காரணத்தைக் கூறத் துணிந்திருக்கின்றார், பெருந் தலைவர் காமராசர்!

'வாக்காளர் பட்டியல் தயாரித்ததில் கணிசமாக ஊழல் நடந்திருக்கிறது' எனக் குறிப்பிட்டிருக்கின்றார். இந்த ஊழல் காரணமாகத்தான் காங்கிரசுக் கட்சி தேர்தலில் தோற்றுவிட்டது' என்பது, அப்பெருந் தலைவரின் கண்டுபிடிப்பு!

வாக்காளர் பட்டியலை இதுவரையில் தயாரித்து வந்தது யார்? கடந்த இருபதாண்டுக்காலமாக ஆட்சிப் பொறுப்பிலிருந்துவந்த காங்கிரசுக் கட்சி, வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதில் ஏற்றுக்கொண்டிருந்த பங்கின் அளவு என்ன?

தேர்தல் குழுதான் வாக்காளர் பட்டியலை அவ்வப்பொழுது புதுப்பித்துக்கொண்டு வருகிறது என்றாலும், தமிழக அரசாங்கத்தின் மேற்பார்வையில்தான் வாக்காளர் பட்டியல் புதுப்பிக்கப்பட்டு வந்திருக்கிறது. வாக்காளர் பட்டியலில் புது வாக்காளர்களைச் சேர்ப்பதும், இறந்துபோனவர்களை நீக்குவதும், அரசாங்க அதிகாரிகளின் கண்காணிப்பில்தான் நடைபெற்றுவந்துள்ளன.

வாக்காளர் பட்டியலை உருவாக்குவது பற்றிய உண்மை இவ்வாறு இருக்க, 'வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதில் கணிசமாக ஊழல் நடைபெற்று இருக்கிறது' எனக் காங்கிரசுப் பெருந் தலைவர் கூறியிருப்பது, நகைப்புக்குரியதல்லவா?

காங்கிரசுப் பெருந் தலைவர் காமராசர் அவர்களின் இந்தப் பச்சைப் பொய்க்கு விளக்கமோ, பதிலோ நாம் கூறத்தேவையில்லை. தேர்தல் கமிஷன் சார்பில், காமராசர் அவர்களின் பொய்க்கூற்றுக்குச் சுடச்சுடப் பதில் தரப்பட்டிருக்கிறது. அப்பதிலை, இங்கு குறிப்பிடுவதே போதும்—பெருந் தலைவர் காமராசர் அவர்களின் அரசியல் பித்தலாட்டத்தை அம்பலப்படுத்த!

"காமராசர் குற்றச்சாட்டை மறுத்து, தேர்தல் குழு வியக்கவும் செய்தது!

"வாக்காளர் பட்டியல் நகல் வெளியிடப்பட்டு, அது முடிவானதாகக் கொள்ளப்படுவதற்கு முன்னர், ஆட்சேபனைகள் எழுப்ப அரசியல் கட்சிகளுக்கு உரிமை இருக்கிறது.

"பின்னர் அந்தப் புகார்களை விசாரிக்கவும், தேவையான இடத்தில் திருத்தவும் தேர்தல் குழு கடமைப்பட்டுள்ளது.

"வாக்குப் பதிவு வேளையில் ஆள்மாருட்ட விவகாரங்களைக்கூடத் தேர்தல் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவரலாம்; அப்படிப்பட்ட விவகாரங்களைக் கையாளத் தேர்தல் சட்டத்தில் போதிய விதிகள் உள்ளன.

"இவையெல்லாமிருந்தும் காமராசர், தமது குற்றச்சாட்டை எந்த ஆதாரத்தோடு சாட்டினார் என்பது தெரியவில்லை."

தமது பித்தலாட்டப் பேச்சுக்குத் தேர்தல் குழுவிடமிருந்தே மறுப்புக் கிளம்பும் என, அப்பெருந் தலைவர் எதிர்பார்த்திருக்கமாட்டார்! அம்மறுப்பு கிளம்பினாலும், அதை ஒருபொருட்டாக அவர் மதிக்கமாட்டார்! இப்பொழுது உயர்த்தப்பட்டிருக்கின்ற அந்த உயர்ந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கின்றவரையில் இதைவிடப் பெரும் பொய்யைக்கூட அவர் கூறத்தான் துணிவார்! அவர் பயின்றுள்ள 'ஆரோக்கிய அரசியல்' அத்தகையதாகும்!

—கா. க.

'நூல்' பற்றிய 'நூல்' ஆராய்ச்சி!

புள்ளினங்கள் ஆர்க்கின்றன! பொழுது புலருகிறது! புறப்பட்டிருக்கிறார் காமராசர்—குறைகள் இருந்தால் முறையிடுங்கள்!

"மந்திரி! நமது மாநகர்தன்னில் மாதம் மும்மாரி மழை பொழிகிறதா?" என்று கேட்ட ராஜாக்களை நீங்கள் பார்த்திருக்க முடியாதே — என்றெண்ணித்தான், இப்போது நான், உங்களுக்குக் காமராசரையாவது காட்டலாம் என்று முடிவு செய்தேன்!

"நெசவாளர்களின் நிலையை அறிய நான் ஆவலாய் இருக்கிறேன்; நெசவாளர்கள் இந்தப் பகுதியில் அதிகமாக இருக்கிறார்கள்; அவர்கள் பிரச்சினையைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நான் கருதுகிறேன்.

"நெசவாளர்களுக்குப் பிரச்சினைகள் அதிகமாக இருக்கும். அவர்களுக்கு நூல் கிடைக்கிறதா? அவர்களுக்கு வருமானம் எவ்வளவு கிடைக்கிறது?—என்பதையெல்லாம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

"'மாஸ்டர் வீவர்'களுக்கு நூல் கிடைக்கிறதா? அதிகாரிகள் அவர்களுக்குக் கடன் தருகிறார்களா? என்பதை எல்லாம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்."

'நூல், நூல்' என்று—ஏதோ நூல் ஆராய்ச்சி செய்யப் போகிறவர்போல்—பிய்த்துச் சிக்கலாக்கியிருக்கிறார் நெசவாளர்களை—சேலம் கூட்டத்தில்!

ஏதோ ஆடையே இல்லாத நாட்டிலிருந்து வந்தவர் போல்—

அல்லது,

ஆடையென்றால் என்ன என்றே தெரியாதவர்போல்—

நெசவாளர்களின் நிலையை மிக அடிப்படையுடன் அணுகியிருக்கிறார், காங்கிரசுத் தலைவர்!

இவர் கட்டியிருப்பது வேண்டுமானால் கதராக இருக்கலாமே தவிர, இவரைச் சுற்றியுள்ள அத்தனைப் பேரும் கதராடை உடுத்தியவர்கள் அல்லர்!

ஆனால், அதிசயமாய்ப் புத்தகத்தில் படித்துத்தான்—அதுவும் இப்போதுதான் தெரிந்து கொண்டவர்போல்—

"நெசவாளர்களின் நிலையை அறிய ஆவலாய் இருக்கிறேன்!

"அவர்கள் பிரச்சினையைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று கருதுகிறேன்"

என்று சினைப் பாலைவனத்தில் தண்ணீருக்கு அலைந்த பிரயாணியைப்போல், நெசவாளர்களைப் பற்றித் தமது 'தாக' நிலையைத் தெரிவித்திருக்கிறார்!

"நெசவாளர்கட்கு நூல் கிடைக்கிறதா? 'மாஸ்டர் வீவர்'களுக்கு நூல் கிடைக்கிறதா?" என்று துருவித் துருவிக் கேட்டிருக்கிறார்!

நல்லவேளை — 'நூலினால்தானே நெய்கிறீர்கள்? என்ன கஷ்டம்?' என்று அனுதாபம் காட்டாமல் விட்டார்!

திருவண்ணாமலையிலும், வேலூரிலும், 'விவசாயிகளே!' என்று (கூக்)குரல் கொடுத்தார்!

சேலத்தில், 'நெசவாளர்களே!' என்று அழைத்திருக்கிறார்!

இவ்வாறாக, இப்போது 'தொழில் ரீதி'யில் மக்களைச் சந்திக்கிறார் போலும்!

கைத்தறிக்கு அவ்வப்போது கை கொடுத்த கழகத்துக்காரர்களை, காமராசர் மறந்துவிட்டார் போலிருக்கிறது!

"'நூல்' என்றால் என்ன? எப்படிக் கிடைக்கிறது? எவ்வாறு இருக்கிறது?" என்று 'நூலா'ராய்ச்சிக்குக் காமராசர், இப்போதுதான் வருகிறார்! ஆனால், அவரைவிட அரசியலில் வயது குறைந்த முன்னேற்றக் கழகத்துக்காரர்கள், கைத்தறி ஆடைகளை முதுகில் சுமந்து விற்று, நெசவாளர்களின் நலிவினைத் துடைத்த போது, காமராசரோ அல்லது அவரது சகாக்களோதான் சென்னைக் கோட்டையில் கொலுவீற்றிருந்தார்கள்!

ஐந்து ஆண்டுகளுக்கு மேல் முதலமைச்சராக இருந்தபோது தெரிந்துகொள்ள முடியாத நெசவாளர்களை — அவர்களது வருமானத்தை — பிரச்சினைகளை —இப்போது அறிந்துகொள்ள ஆவலாக இருக்கிறார் காமராசர்!

காகத்தின் வாயிலிருக்கும் வடையில் நாட்டம்—மரத்தின் கீழே உள்ள நரிக்கு! ஆனால், அதைக் காட்டிக்கொள்ளாமல்—

"காகமே! உன் பாட்டென்றால் எனக்கு ஒருவகை மோகம்; வாயைத் திறந்து பாட்டொன்று பாடேன்"

என்றதாம்!

★ 1967 பிப்ரவரிக்குப் பின்னரா நெசவாளிகளுக்குப் புதிய பிரச்சினைகள் வந்துவிட்டன?

★ அதற்கு முன்னால் நூலால் ஆடை நெய்யவில்லை— இப்போதுதான் அந்த முறை வந்துள்ளதா?

★ 1967 வரையிலும் நூல் இல்லையென்றாலும், எப்படியாவது நெசவாளர்கள் ஆடை நெய்தார்கள்; இப்போது அது முடியாதா?

அமெரிக்காக்காரன் இங்கே வந்து, இரட்டை மாட்டு வண்டியை முறைக்க முறைக்கப் பார்க்கிறான் என்றால், அதில் அர்த்தம் இருக்கிறது; ஏனென்றால், அங்கே அது இல்லை!

காமராசர் ஏன் இப்படி ஆடையையும் நூலையும் வியக்க வியக்கப் பார்க்கிறார்?

—எஸ். ஆர்.

மா சே-துங் தலைமை மறைகிறது?

மக்கள் சீனாவில் 'கீழ் வாரிசு' உருவாகிறதாம்!

"மா சே-துங்கின் தனித் தலைமை சிறிது சிறிதாக மாற்றப்பட்டு, அவருக்குக் கீழே உள்ளவர்களின் கூட்டுத் தலைமைக்குச் சீனா ஆளாகிவருகிறது"

என, தைப்பே (தேசிய சீனா) நகர 'சைனா போஸ்ட்' என்னும் ஆங்கில நாளிதழ் செய்தி ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

இதற்கு உதாரணமாக, அண்மையில் இராணுவத்தில் பிறப்பிக்கப்பட்டிருக்கும் உத்தரவு ஒன்றினை அந்த இதழ் சுட்டிக்காட்டியிருக்கிறது.

வழக்கமாக மா சே-துங் மட்டுமே தனியாகக் கையெழுத்திடும் அந்த உத்தரவு, அவருக்குப் பதிலாக வேறு நால்வரால் கையெழுத்தாகியிருக்கிறதாம். பல்வேறு கட்சி—நிர்வாக அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் அந்த நான்கு பேரும் என்று தெரிகிறது.

"இராணுவத்திடமிருந்து எத்தகைய நிலைபடைத்த எவரும் ஆயுதங்களை அபகரிக்கக்கூடாது; அப்படி நடந்தால் உடன் சுடப்படுவார்கள்" என்பது அந்தப் புதிய உத்தரவு!

மத்திய அமைச்சரவையில் மாற்றம் இருக்குமா?

கட்சித் தேர்தலை எதிர்பார்க்கிறார் இந்திரா— 'இப்போதைக்கு இல்லை' என்பதன் காரணம் இதுதான்!

வெளிவிவகார அமைச்சராக இருந்து—மொழிப் பிரச்சினை காரணமாக சாக்ளா வெளியேறியதை அடுத்து—மத்திய அமைச்சரவையில் முக்கிய இலாகாக்களில் பொறுப்பு வகிப்பவர்கள் மாற்றப்படலாம்; புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படலாம் என்று இருந்துவந்த யூகங்களுக்கு, தலைமையமைச்சர் இந்திரா, ஒரு முற்றுப் புள்ளி வைத்திருக்கிறார்!

நம் நாடு செய்தி நோக்கு

"தற்போதைக்கு அத்தகைய உத்தேசமில்லை; வெளிவிவகார அமைச்சுத்துறைப் பொறுப்பையும் நானே ஏற்க உத்தேசித்திருக்கிறேன்" என, காங்கிரசுப் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரிடையே அவர் தெரிவித்திருப்பதனை, உண்மையான அறிவிப்பாகவும் கொண்டு விடுவதற்கில்லை!

"விளைவுகளை முன்கூட்டி அறியும் ஒரு தந்திரமாகவும் (feeler) இதனை, இந்திரா மேற்கொண்டிருக்கக்கூடும்" என்று பார்வையாளர்கள் நம்புகின்றனர்!

ஏனெனில், இப்போதைக்கு இருக்கும் நிலைமையில் வெளிவிவகாரப் பொறுப்பையும் இந்திரா ஏற்பது என்பது அவரால் முடியாத காரியம்! மற்ற அமைச்சர்கள்–சொந்தக் கட்சியின் தலைவர்கள், அதனை அவ்வளவாக வரவேற்கவுமாட்டார்கள்!

புதிய சேர்க்கை இல்லாமலும் இந்திரா, வெளிவிவகார அமைச்சரை நியமிக்கமுடியாது; ஏனெனில், 'இருக்கும் அமைச்சர்களிடையே பதவிப் பொறுப்புக்களைப் பங்கிட்டுக்கொண்டு விடலாம்' என்ற அளவில், வெளிவிவகாரத்துறை, சாதாரணமான இலாகா அல்ல! 'அதனை யார் பெறுவார்' என்பதில், ஆவல் பொதிந்த கண்கள் பல உற்றுநோக்கியபடி இருக்கின்றன!

ஜி பார்த்தசாரதி—தினேஷ் சிங்—சுவரன் சிங்—ஜெகஜீவன் ராம்—டி. டி. கிருஷ்ணமாச்சாரி—இப்படிப் பல பெயர்கள், செய்தி உலகில் அடிபட்டு வந்துள்ளன!

இந்திரா இந்த நிலைமையைப் பயன்படுத்தி, அமைச்சரவைக்கு வெளிபலத்தையும் பெறும் முறையில்—மற்ற கட்சியிலிருந்து யாரையேனும் அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ளலாம் என்ற ஒரு யூகமும் வந்திருக்கிறது!

அந்த வகையில், 'நாத்பாய்' என்ற ச. சோ. கட்சி உறுப்பினரின் பெயரை, இதழ்கள் வெளியிட்டிருக்கின்றன!

இதற்கிடையில், சென்னை வந்த தினேஷ் சிங், டி. டி. கே.-யைச் சந்தித்திருக்கிறார்!

'இலண்டனில் தூதுவராக அவர் நியமிக்கப்படுவார்' என்று ஏற்கனவே செய்தி வந்தது. இந்தச் சந்திப்பு, அவரை, 'வெளிவிவகார அமைச்சராக இருக்கச் சம்மதம் கோரும் வகையில் இருக்கலாம்' என்றும் நம்பப்படுகிறது.

காங்கிரசு மேலிட வட்டாரத்தில், டி. டி. கிருஷ்ணமாச்சாரி, 'காமராசருக்கு வேண்டியவர்' என்று கூறப்படுவது வழக்கம்!

தலைமையமைச்சர்—காங்கிரசுத் தலைவருக்கிடையே இன்று வளர்ந்துள்ள வேறுபாடு உணர்ச்சிகளுக்கிடையே டி. டி. கே., இவ்வளவு பெரிய பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்படுவாரா என்பதும் சந்தேகமே!

'துணைத் தலைமையமைச்சர்' என்று இருக்கும் மொரார்ஜி தேசாய், வெளிநாட்டுப் பயணத்தில் இருக்கிறார்!

உள்மாச்சரியங்களுக்கிடையிலும், இந்திரா இப்போதெல்லாம், சவாண்—மொரார்ஜி ஆகியோரைக் கலக்காமல் எந்த ஒரு பெரிய முடிவினையும் எடுப்பதில்லை என்பதை காங்கிரசு வட்டாரங்களே கூறுகின்றன!

சவாண், மொரார்ஜி, இன்னும் ஜெகஜீவன்ராம் ஆகியோர், நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாத டி.டி.கே. இடையில் வந்து—'வெளி விவகார இலாகா' என்னும் பெரிய பொறுப்புக்கு உரியவராவது—'வரிசைப் பிரச்சினை'யைப் பாதிப்பதாக நிச்சயம் உணருவார்கள்! நடுவில் வரும் டி டி.கே., சிறிய இலாகாவைக் கொடுத்தாலும் ஏற்றுக்கொள்ளமாட்டார்!

இத்துணைப் பிரச்சினைகளுக்கிடையிலும், 'மத்திய அமைச்சரவையில் மாற்றம் இல்லை' என்று இந்திரா தெரிவித்திருப்பது, ஒரு தற்காலிக அறிவிப்பாகவே இருக்க முடியும்!

தானே வெளிவிவகார இலாகா பொறுப்பினை ஏற்கப்போவதாகக் கூறியிருப்பது, 'நிலைமைகள் மேலும் எப்படி வளருகின்றன' என்பதனை நோக்கும் ஒரு நடவடிக்கையாகவே இருக்க முடியும்!

அடுத்த நாடாளுமன்றக் கூட்டம்—காங்கிரசுத் தலைவர் தேர்தல் இரண்டுக்காகவும் அவர் காத்திருந்து செயல்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

ஏனெனில், காங்கிரசின் நிலைமைகள், அப்போது பெரிதும் மாற இருக்கின்றன!

இப்போதைக்கென்று ஏதோ ஒரு மாற்றத்தைச் செய்துவிட்டு, அப்போது எழும் சூழ்நிலைகளை 'வீணுக்கி'விட இந்திரா, தயாராக இருக்கமாட்டார்!

உதாரணமாக, காமராசரே காங்கிரசுத் தலைவராக வரவில்லை என்ற நிலைமை வந்தால், அதற்குப் பின் டி.டி.கே.-யை, பொறுப்புள்ள ஓர் இலாகாவில் அமர்த்துவதற்கு, இந்திரா, தயக்கமேதும் கொள்ளமாட்டார்!

இன்னும் கூறப்போனால், இலாகா மாற்றத்தையே, கட்சியில் தனக்குக் கிடைத்த ஒரு துருப்புச் சீட்டாகவும் பயன்படுத்திக்கொள்ள இந்திரா தயங்கமாட்டார்!

துருப்புச் சீட்டு, ஆட்டத்தை நிர்ணயிப்பதற்குப் பதிலாகத் திறமைக் குறைவான துருப்புச் சீட்டாக இருந்தால், ஆடுபவரே ஆட்டம் கொண்டுவிடுவதுமுண்டு!

இப்படிப்பட்ட சிக்கல்கள் கொண்ட ஒரு பிரச்சினையை, 'இப்போதைக்கு மாற்றம் ஏதும் இல்லை' என இந்திரா அறிவித்திருப்பது, அரசியலை உற்று நோக்குபவர்களுக்கு எவ்வித ஆச்சரியத்தையும் கொடுக்காது!

ஆறும் தூய்மைபெறும்— ஆற்றங்கரைகளும் பூம்பொழிலாகும்

கரையோரவாசிகளுக்கு மாற்றுக் குடில்கள் அமையும்

கூவம் சீரமைப்புத் திட்டம்— அமைச்சர் மு. கருணாநிதி விளக்கம்

சென்னையில் 19—9—67 அன்று நடைபெற்ற கூவம் ஆற்றுச் சீரமைப்புத் திட்டத் துவக்க விழாவில், போதுப் பணித்துறையமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:—

சென்னை நகர வரலாற்றிலேயே இந்நாள் ஒரு பொன்னாள் என்று கூறலாம்.

பலப் பல ஆண்டுகளாக இங்கு நகராட்சியின் பொறுப்பை ஏற்றவர்களும்—இம்மாநகர மக்களும் வேண்டி விழைந்த ஒரு திட்டம், இன்று உருவாகும் நிலைக்கு வந்துள்ளது.

அதிலும், இந்த அமைச்சரவை பொறுப்பேற்று ஒரு சில மாதங்களுக்குள்ளேயே இத்தேவைக்குத் தீர்வுகாணும் வகையில் திட்டத்தைத் தீட்டி, அதற்கு வேண்டிய தொகையையும் அனுமதித்துள்ளது.

இம்மாநகரத்தின் தேவைகளை கருத்திற்கொண்டு அவற்றினை உடனடியாக ஈடுசெய்வதில் இன்றைய அரசும், அதன் முதல்வரும் எத்துணை ஆழ்ந்த அனுதாபத்துடன் விரைந்து

ஆனால், வட கிழக்குப் பருவ காலத்தில்தான் கூவம் ஆற்றில் பெருக்கு எடுக்கிறது; பெருக்கில்லாக் காலங்களில் கடல் நீரை ஆற்றிற்குள் புகவிட்டு, ஓட்டத்தை எக்காலத்திலும் நிலையாக செய்தல் வேண்டும். இதற்கான அணை அமைக்கவும் திட்டத்தில் இடம் கொடுக்கப் பட்டுள்ளது.

மணலிட்டு மேடுறுவதால் கடல் நீர் புகவிடாமல் தடைபடும் இடத்தில் மணல் உறிஞ்சிகளைப் பொருத்தி அம்மண்ணை அகற்றவும், கடல்—வாயைத் திறந்து, மூடவிடாமல் தடுக்கும் முறை செய்யப்பட்டுள்ளது.

இந்த வேலைகளுக்கென எண்பத்தெட்டரை இலட்சம் ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது; ஆனால், இந்த வேலைகளால் மட்டும் நாம் மேற்கொண்டுள்ள

கூவம்சீரமைப்புத்திட்டம்

முதல் கட்டம்—

முகத்துவாரத்து வேலைகள்

கலங்கல் கட்டி முகத்துவாரத்தைச் சீரமைத்தல்	ரூ. 13.70	இலட்சம்
மணல் வாரும் இயந்திரம் வாங்கல்—தோண்டிய மணல் அகற்றல்	ரூ. 10.30	,,
மண் உறிஞ்சும் பொறியைப் பொருத்த முகவாயில் மேடை அமைத்தல்	ரூ. 8.00	,,
	ரூ. 32.00	,,

இரண்டாம் கட்டம்—

ஆற்றை ஒழுங்குபடுத்தி அழகுபடுத்தல்

நேப்பியர் பாலத்திலிருந்து சேத்துப்பட்டு இருப்புப் பாதைப் பாலம் வரையில் உள்ள ஆற்றின் போக்கை ஒழுங்குபடுத்தல்	ரூ. 37.00	,,
ஆற்றின் வடகிளையை ஒழுங்குபடுத்தல்	ரூ. 9.00	,,
அழகுபடுத்தல், பலதர வேலைகள்	ரூ. 10.50	,,
	ரூ. 56.50	,,
ஆற்றின் கரையில் இருமருங்குமுள்ள ஆக்கிரமிப்பை அகற்றி குடிபெயர்த்தல்	ரூ. 30.00	,,
ஆக மொத்தம்	ரூ. 118.50	,,

முனைந்துள்ளார்கள் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு!

இயற்கை வாய்ப்புகளை நாம் முற்றிலும் பயன்படுத்தி இம்மாநகரின் அழகை மேலும் பொலிவுறச் செய்வதே நம் அறிவிற்கும் மேம்பாட்டிற்கும் உகந்த முறை. இந்நோக்குடன்தான் இன்று நாம் செயல்படுத்த விழையும் திட்டம் உருவாகியுள்ளது.

இதற்குமுன் இல்லாத ஒரு சில வாய்ப்புகளையும் இத்திட்டத்திற்கு உதவும் வகையில் நாம் பிணைத்துள்ளோம்.

எண்ணூர் அனல் மின்நிலையத்திற்குக் குளிரூட்டு நீரைக் கடலிலிருந்து செலுத்தப்பட்டு—அது பயன்பட்ட பின்னர், 150 கியூசெக்ஸ்கள் பக்கிங்காம் கால்வாயில் வெளிவிடப்படுகிறது; வட கால்வாய் மூலம் வந்து இந்நீர் கூவம் ஆற்றின் வட பக்கத்தில் சேருகிறது; ஆற்றிற்கு கரை வகுத்து இந்நீரை அதன் மூலம் செலுத்துவதால், நீர் ஓட்டம் நிலையாகிறது.

திட்டத்தின் நோக்கம் நிறைவேறும் என்று கூறுவதற்கில்லை.

முதலாவதாக, கூவம் ஆற்றில் சேரும் கழிவு நீரையும், சாக்கடைத் தண்ணீரையும் அதில் சேரவொட்டாமல் தடுக்கவேண்டும்.

இதல்லாமல், நாம் எவ்வளவு கூடுதலாக கடல் நீரையோ அல்லது வேறு நீரையோ கூவம் ஆற்றில் செலுத்தினாலும், திரும்பத் திரும்பச் செலுத்தப்பட்ட நீர் கேடுற்று நாற்றம் வீசவே வாய்ப்புகள் ஏற்படும்.

இதை உணர்ந்து அரசு, இம்மாநகரை ஐந்து பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும் தேவையான தனிக் கழிவு நீர் அமைப்புகளைச் செயலாற்ற முற்பட்டுள்ளது.

திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், அடையார் ஆகிய பகுதிகளுக்கான திட்டத்திற்கு ரூ. 279 இலட்சம் மதிப்பீட்டிலும், கோடம்பாக்கம், தியாகராய நகர் ஆகிய பகுதிகளுக்கு ரூ. 35 இலட்சம் மதிப்பீட்டில் உள்ள திட்டத்துக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

ஆற்றின் போக்கை ஒழுங்குபடுத்தி கரை வகுத்து, கரையின் இருமருங்கிலும் சாலைகள் அமைத்து பூங்காக்கள் நிறுவுவது இத்திட்டத்தின் ஒரு பகுதி.

எளிய மக்கள், இந்த ஆற்றின் கரையிலே குடிசைகளை அமைத்து—தங்களுக்கும் வசதியற்ற முறையில் வாழ்வது—நம் நகரத்திற்கும்—ஏன்—நம் அனைவருக்குமே கருத்தில் கொண்டு செயல்பட வேண்டிய நிலை!

கூவம் ஆற்றில் வாழும் மக்களுக்கும் நல்வாழ்வு அளிக்கும் வகையில் புதிய வீடுகள் அமைத்து அவர்களை அங்கு குடியேறச் செய்து பல வசதிகள் அளிக்க வேண்டும் என்பதும் இத்திட்டம் நிறைவேற்றுங்கால் மேற்கொள்ள வேண்டிய ஓர் இன்றியமையாத பெரும் பணியாகும். இந்த வகையில் மாநகராட்சியும், வீட்டு வசதிக் குழுவினரும், நமக்கு பெரிதும் உதவ வேண்டும் என்று நான் கருதுகிறேன். அதற்கான வழிவகைகளை அவர்கள் இப்பொழுதே அமைத்திடத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்று நம்புகிறேன்."

உற்பத்தியாளர்கட்கு எந்தவிதப் பாதகமும் ஏற்படாது!

தமிழக உணவுக் கொள்கைபற்றி அண்ணா விளக்கம்

"தமிழக அரசின் உணவுக் கொள்கை எந்த வகையிலும் உற்பத்தியாளர்களின் ஊக்கத்தைக் குறைக்காது"

என்று தஞ்சையில், செய்தியாளர்களிடம் பேசுகையில், முதலமைச்சர் அண்ணா அவர்கள் தெரிவித்தார்.

"சாகுபடிச் செலவு அதிகரித்திருப்பதால் கொள்முதல் விலையை ஏற்ற அரசாங்கத்திடம் ஏதேனும் திட்டமிருக்கிறதா?" என்று நிருபர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே முதலமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அறிஞர் அண்ணா பிறந்த நாள் பரிசு

'நம் நாடு' இதழுக்கு நன்கொடை

சென்னை 38-வது வட்ட தி. மு. க. பொருளாளர் ஜி. டில்லிராஜ் அவர்கள், அறிஞர் அண்ணா பிறந்த நாளையொட்டி அண்ணா அவர்கட்கு மாலையணிவித்து சாக்லெட் வழங்கியதுடன், தீ விபத்து நிதிக்கு ரூ. 10-ம், 'நம் நாடு' வளர்ச்சி நிதிக்கு ரூ. 10-ம் பிறந்த நாள் பரிசாக அளித்தார். அதனைப் பெற்றுக் கொண்டு அண்ணா அவர்கள் நன்றி தெரிவித்துக்கொண்டார்கள்.

['நம் நாடு' இதழுக்கு அளித்த நன்கொடை வரப் பெற்றோம்—நன்றி.]

பிறப்பு

சென்னை 38-வது வட்ட தி. மு. கழகப் பொருளாளரும், சீரணித் தொண்டருமான தோழர் ஜி. டில்லிராஜ் அவர்களின் துணைவியார் 8—9—67-ல் ஒரு பெண் மகவை ஈன்றெடுத்தார். தாயும் சேயும் நலம்.

இவர்களுக்கு 14—11—65 அன்று அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது.

* * *

பொதுப்பணி அமைச்சர் மு. கருணாநிதி அவர்களின் காரோட்டியான திரு. பீர்கண்ணு அவர்களின் துணைவியார் ஓர் ஆண் மகவை ஈன்றெடுத்தார்; தாயும் சேயும் நலம்.

பன்மொழிப் புலவருக்குப் பொன்னாடை போர்த்தினார் அறிஞர் அண்ணா

அமைச்சர்கள், தமிழறிஞர்கள் பாராட்டுரை வழங்கிச் சிறப்பித்தனர்

புரட்சி நடிகர் சார்பில் அறுபது பொற்காசுகளாலான மாலையணிவிக்கப்பட்டது

சென்னை, செப். 21—

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு மணிவிழா, நேற்று மாலை மயிலாப்பூர் இராஜேசுவரி திருமண மண்டபத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

விழாவுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை தாங்கி, அப்பாதுரையார் தம்பதிகளுக்கு பொன்னாடை போர்த்தினார்கள்.

அமைச்சர்கள் மு. கருணாநிதி, செ. மாதவன், திருவாளர்கள் கி. ஆ. பெ. விசுவநாதன், டாக்டர் மு. வரதராசனார், பேராசிரியர் இலக்குவனார், ம.பொ. சிவஞானம், பொள்ளாச்சி என். மகாலிங்கம், ஏ. கே. வேலன், எஸ். நல்லபெருமாள், டாக்டர் எஸ். கே. நாயர், எம். ஆர். பெருமாள் முதலியார், சௌந்தரம் கைலாசம், டாக்டர் மெ. சுந்தரம், குன்றக்குடி அடிகளார் ஆகியோர், பன்மொழிப் புலவரின் அறிவாற்றலையும், தமிழ்த் தொண்டையும் பாராட்டி உரையாற்றினர்.

கலைஞர் டி. கே. சண்முகம், புலமைப் பித்தன் எழுதிய கவிதையை இசையுடன் பாடிப் பன்மொழிப் புலவருக்குப் பாமாலை சூட்டினார்.

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் சார்பில், அறுபது (சவரன்) பொற்காசுகளாலான மாலை அணிவிக்கப்பட்டது.

அறிஞர் அண்ணா அவர்கள் சார்பில் அண்ணியார் அவர்கள், பன்மொழிப் புலவர் தம்பதிகட்கு மாலையணிவித்து, வேட்டியும், புடவையும் வழங்கினார்கள்.

தமிழ் எழுத்தாளர்கள் சார்பில் திரு. மா. சு. சம்பந்தம் மாலையணிவித்தார்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகச் சார்பில், திரு. இராமநாத பிள்ளை மாலையணிவித்தார்.

சட்டமன்ற அவைத் தலைவர் சி. பா. ஆதித்தனார் சார்பிலும் மலர்மாலைகளும், கைத்தறியாடைகளும் அணிவிக்கப்பட்டன.

மற்றும் நூற்றுக்கணக்கான நண்பர்களும், தமிழன்பர்களும் மலர் மாலை—கைத்தறி ஆடைகள் அணிவித்தும், பரிசுப் பொருள்கள் அளித்தும் சிறப்பித்தனர். குன்றக்குடி அடிகளார் தனியே ஒரு பொன்னாடை போர்த்தினார்.

அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், 'மணிவிழா மலரை' வெளியிட்டார்; அதனை திரு. நா. மகாலிங்கம் ரூ. 100 கொடுத்துப் பெற்றுக்கொண்டார்.

சென்னை மாணவர் மன்றம், மதுரை எழுத்தாளர் மன்றம், சென்னைத் தமிழாசிரியர் கழகம், மாநிலத் தமிழாசிரியர் கழகம், மாநிலத் தமிழ்ப் பேரவை ஆகியவை சார்பிலும் மாலை யணிவிக்கப்பட்டன.

மற்றும் மலேசியா, சிங்கப்பூர், ஆமதாபாத், பம்பாய் முதலிய இடங்களிலிருந்தெல்லாம் வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

அரசினர் மாதிரி உயர்நிலைப் பள்ளியாசிரியர் பாவலர் மகம்மது சாலியா, வாழ்த்து மடல் வாசித்தளித்தார்.

பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள் ஆயிரம் வெண்பொற்காசுகள் அளித்துச் சிறப்பித்தார்.

பாராட்டுக்கு பன்மொழிப் புலவர் அப்பாதுரையார் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

விழாத் துவக்கத்தில் விழாக் குழுச் செயலாளர் புலவர் மி. ச. நடேசன் அனைவரையும் வரவேற்றார்.

விழா மண்டபமே கொள்ளாத அளவுக்குத் தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள், நூல் வெளியீட்டாளர்கள், கழகத் தோழர்கள் உட்படப் பல்லாயிரவர் குழுமியிருந்தனர். தாய்மார்களும் ஏராளமானோர் வந்திருந்தனர்.

(சொற்பொழிவுகள் அடுத்து வெளிவரும்)

இந்திப் பட எதிர்ப்பு

மாணவர்களுக்கு அமைச்சர் மு. கருணாநிதி வேண்டுகோள்

சென்னை. செப். 20—

தமிழகத்தில் இந்திப் படங்களைக் காட்டுவதற்கு மாணவர் இந்தி எதிர்ப்புக் குழுவினர் எதிர்ப்புத் தெரிவித்திருப்பது தெரிந்ததே. அது குறித்து பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி விடுத்த அறிக்கை வருமாறு :—

"இந்தி ஆதிக்க எதிர்ப்புணர்ச்சி பெற்ற அரசு—அந்த உணர்ச்சியை மதிக்கின்ற அரசு—இன்றையத் தமிழக அரசு! அதனால் தான், 'இந்தி எதிர்ப்பு நடவடிக்கைகளை எங்களிடம் விட்டுவிடுங்கள்' என்று மாணவர்களிடம் வலியுறுத்திவருகிறோம்.

"ஒரு மொழியை விரும்பிக் கற்றுக் கொள்வதற்கும், மறைமுகமாகவோ, நேரிடையாகவோ, திணிப்பதை ஏற்றுக்கொள்ளுவதற்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது.

"விரும்பி ஒரு மொழியைக் கற்றுக்கொள்ளுவதைவிட, உணர்ச்சிகளில் குறைந்தது தான் — இன்னொரு மொழிப் படத்தையோ, கலை நிகழ்ச்சியையோ காண்பதும் ரசிப்பதும்!

"இந்திப் பட அதிபர்களின் இந்திப் படம் தமிழ்நாட்டில் திரையிடப்படுவதுபோல், தமிழ்ப் பட அதிபர்கள் வெளியிடும் இந்திப் படங்கள் வட மாநிலங்களில் திரையிடப்படுகின்றன.

"இந்திப் படங்கள், கலைத்துறையிலும்—பொருளாதாரத் துறையிலும் பட அதிபர்களுக்கு மட்டுமன்றி, ஏராளமான தொழிலாளர்களுக்கும் வாழ்வளித்து வருகின்றன.

"இந்தி எதிர்ப்பு உணர்ச்சியைக் காட்ட எத்தனையோ அமைதியான முறைகள் இருக்கின்றன. அந்த முறைகளில் தங்கள் எண்ணத்தை வெளிப்படுத்த மாணவர்களுக்கு உரிமை உண்டு. ஒருமுறை பெரும் போராட்டம் நடத்தித் தங்கள் உள்ளக் கொந்தளிப்பை இரத்தம் சிந்திக் காட்டிக்கொண்ட பெருமை அவர்களுக்கு உண்டு!

"ஆகவே, இன்றையத் தமிழக அரசு இந்தி ஆதிக்கத்திற்கு எதிரான வகையில்—அரசாங்க ரீதியான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும் என்பதால், மாணவர்கள் தங்கள் போராட்டத் திட்டங்களைக் கைவிடுமாறு ஏற்கனவே முதலமைச்சர் அறிவித்திருப்பதையும் இப்போது நினைவூட்டுகிறேன்."

அண்ணா அறிவுவளர்ச்சி மன்றம்

அமைச்சர் மு. கருணாநிதி திறந்துவைப்பார்

சென்னை 97-வது வட்டம் சாரதி நகரில் 23-9-67 மாலை 6-மணிக்கு அமைச்சர் மு. கருணாநிதி அண்ணா அறிவு வளர்ச்சி மன்றத்தையும், அண்ணா படத்தையும் திறந்து வைப்பார்; அமைச்சர் சாதிக் பாட்சா சிறப்புரையாற்றுவார்.

பாலசுந்தரம் மறைவு

அண்ணா இறுதி மரியாதை

சென்னை, செப். 20—

இன்று இயற்கையெய்திய கழகத் தோழர் சி. ஆர். பாலசுந்தரம் அவர்கட்கு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், பெத்துநாயக்கன்பேட்டையில் உள்ள அவரது இல்லம் சென்று மாலையணிவித்துத் தமது இறுதி மரியாதையைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

திருமணம்

திரு. டி. எம். பார்த்தசாரதி அவர்களின் இளைய மகன் செல்வன்: டி. பி. சங்கரனுக்கும்—செல்வி: இராணிக்கும் 24-9-67 காலை 10 மணியளவில், வில்லிவாக்கம் மௌனசாமி மடத் தெரு, சிங்காரம் பிள்ளை உயர்நிலைப் பள்ளி மண்டபத்தில், முதலமைச்சர் **அறிஞர் அண்ணா** தலைமையில் திருமணம் நடைபெறும்; அழைப்பு கிடைக்கப் பெறாதவர்கள், இதனையே அழைப்பாக ஏற்று கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆந்திர அமைச்சர் மறைவு--- அண்ணா இறுதி மரியாதை

புற்று நோயால் பாதிக்கப்பட்டு சென்னை மருத்துவமனையான்றில் சிகிச்சை பெற்றுவந்த ஆந்திர உள்துறை அமைச்சர் திரு. ஏ. சி. சுப்பா ரெட்டி இன்று மாலை இயற்கையெய்தினார்.

செய்தியறிந்ததும் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் சென்று மாலையணிவித்து, தமது இறுதி மரியாதையைத் தெரிவித்து வந்தார்.

பாலர் அரங்கம்

செப்டம்பர் 22, 23-ந் தேதிகளில் மாலை 4 மணிக்கு

'சிட்டியும் சுட்டியும்'

★

செப்டம்பர் 24-ந் தேதி மாலை 4 மணிக்கு

சென்னை-மயிலாப்பூர் செயிண்ட் தாமஸ் கான்வெண்ட் பள்ளி மாணவர்கள் நிகழ்த்தும்

சிறுவர் கலை நிகழ்ச்சி

கட்டணம் வழக்கம்போல்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13. [illegible]) வெளியிடப்பெறுகிறது.



நடக்க இருப்பவை :

அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டங்கள்

22--9--67

குடந்தை

எம்.ஜி.ஆர். பொதுநல மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு மகாமகக்குளம் தென்கரையில்; தலைவர்: க. சா. செல்லையா; பேசுவோர் : சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., கோ. சி. மணி, சு. பத்மநாபன், பி. வி. செயராமன் எம்.ஏ., எம்.சி.

ஈரோடு 24-வது வட்டம்

தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு பட்டக்காரர் தோட்டம் கலைஞர் கருணாநிதி திடலில்; தலைவர் : ப. ச. விசுவநாதன் ; கொடியேற்றுபவர் : ஏ. எஸ். தாவூத் ; பேசுவோர் : மு. சின்னச்சாமி எம்.எல்.ஏ., எஸ். அப்பாவு, இ. ஆர். குமாரசாமி, இரா. மாணிக்கம்.

நாகை 3-வது வட்டம்

அழகிரி மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு அட்டக்குளத் தெருவில்; தலைவர்: கே. கிருட்டினன்; பேசுவோர் : கோ. சி. மணி, எஸ். தியாகராசன் பி.ஏ. பி.எல்., ஆரூர் இராசன், எஸ். எம். ரெங்கசாமி எம்.சி., ஆர். இராசையன் பி.ஏ.பி.எல்.

கோவை 4-வது வட்டம்

தியாகி சின்னச்சாமி மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு பெருமாள் கோவில் திடலில்; பேசுவோர் : வெ. கண்ணன், கோவிந்தராசு எம்எல்.ஏ., சே. அ. இராசமாணிக்கம், ப. கோபால், செ. அரங்கநாயகம், இரா. மோகன், கேரள சுந்தரம்.

சாத்தூர்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்: பெருமாள்ராசு ; பேசுவோர் : தா. கிருட்டினன் எம்.ஏ., எம்.பி., மற்றும் பலர்.

செங்கம்

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு, வண்ணாரத் தெருவில்; தலைவர் : து. கண்ணன்; பேசுவோர் : கே. வி. கேரளீயன், ஆர். முத்து எம்.பி., பி. எஸ். சந்தானம் எம்.எல்.ஏ., தொ. கோவிந்தசாமி, அ. ந. அரங்கநாதன், சி இராமலிங்கம், சின்னராசு, கு. தங்கவேல், வெ வரதன்.

அருப்புக்கோட்டை

11-வது வட்ட தி.மு.க. சார்பில், மாலை 6-மணிக்கு வேலாயுதபுரம், பிள்ளையார் கோயில் தெருவில்; தலைவர்; ப. பெ. ந. நல்லதம்பி; பேசுவோர் : ஆலடி அருணா பி.ஏ.பி.எல் , எம். எஸ் இராமசாமி, சிவ. சண்முக சுந்தரனார், இர. சின்னசாமி.

அரியலூர்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு ஒற்றுமைத் திடலில் ; தலைவர் : ந. மருதமுத்து ; பேசுவோர் : மதுரை முத்து எம்.எல்.சி., கோ. சிவப்பெருமாள், கே. என். இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., இரா. நாராயணன் எம்.எல்.ஏ., து. எத்திராசன், ஏ. எஸ். மணி, ஜே. அபரஞ்சி, எம். பிச்சைமுத்து.

சிவகாசி

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு கீரைக்காரன் பொட்டலில் ; தலைவர் : பெ. மாரியப்பன் ; பேசுவோர் : ஆ. முனியாண்டி, வே. கருணாகரன், ஏ. துரைக்கண்ணன், எஸ். பி மணியம், எஸ். ஏ. ரசாக், அபுதாலிப்.

கோவை 4-வது வட்டம்

அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாக் குழுச் சார்பில் மாலை 6-மணிக்கு பள்ளித் திடலில் வெ. கண்ணன் பேசுவார்.

இரவு 7, 8-மணிக்கு முறையே 14, 30-வது வட்டங்களில், க. வேழவேந்தன் பி.ஏ.பி.எல்., எம். எல்.ஏ. பேசுவார்.

கோபி

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு பெரியார் திடலில் ; பேசுவோர் : கோவை தமீம் ; ஜி. என் இராசு, கன்னியப்பன் பி.ஏ.பி.எல்., கே. எஸ். ஆனந்தன் பி.காம்.பி.எல்., வி. வி. வெங்கடாசலம் பி.எஸ்சி.பி.எல்., பி. கே. சுப்பிரமணியம் பி.ஏ.பி.எல்., எஸ். எம். பழனியப்பன் எம்.பி. பி.எஸ்., பி. கே. பழனியப்பன்.

கோவை

அண்ணா மன்றச் சார்பில்; தலைவர் : என். சுப்பிரமணியம் ; பேசுவோர் : கே. கோவிந்தராசு எம்.எல்.ஏ., க வேழவேந்தன் எம்.எல்.ஏ., எஸ். ஏ. இராசமாணிக்கம் எம்.சி.

எஸ். புதூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு கடைத் தெருவில் தலைவர் : டி. கந்தசாமி; பேசுவோர் : மு. இயலரசன், எஸ். கணேசன் எம்.எல்.ஏ., என். சண்முகம், எஸ். பி. ஜி நாகராசன், ஜி. கே. மூர்த்தி, வி. ஜி. கணேசன், பி. டி. தயாளன்.

அய்யம்பேட்டை

தாளமுத்து—நடராசன் படிப்பகச் சார்பில் மாலை 6-மணிக்கு கீழ வீதியில்; தலைவர்: சு. வேதாசலம்; பேசுவோர்; பெ சீனிவாசன் எம்.ஏ.பி.எல். எம்.எல்.ஏ; கே. எம். இராசகோபால் எம்.எல்.ஏ., பி. வெங்கடசுப்பிரமணி, மு. கோவிந்தராசு.

அமைச்சர்

ஏ. கோவிந்தசாமி

சுற்றுப்பயணம்

செப். 22 : கடலூர்—குடும்பக் கட்டுப்பாடு திட்ட விழா.
செப். 23 : மதுரை
24 : கன்னியாகுமரி
25 : நெல்லை
26 : தஞ்சாவூர்

அமைச்சர்

மா. முத்துச்சாமி

சுற்றுப்பயணம்

செப். 22 : நெல்லை மாவட்ட நிகழ்ச்சிகள்
23 : திருச்சி மாவட்ட நிகழ்ச்சிகள்

அமைச்சர்

சாதிக் பாட்சா

சுற்றுப்பயணம்

செப். 22 பிற்பகல் 10-30 மணி: கோவை—குடும்பக் கட்டுப்பாடு இருவார விழாவினை துவக்கி வைத்தல்; 11-30: பரமசிவம் பாளையம்—பள்ளித் திறப்பு விழா ; பகல் 12 மணி: சோமனூர்—அரசினர் மருத்துவமனையைப் பார்வையிடுதல் ; 11-30 மணி: சூலூர்—ஆசிரியர் தின விழா ; மாலை 3 மணி: நடுப்பாளையம்-பள்ளித் திறப்பு விழா; 4-30 மணி: பள்ளபாளையம்—ஊராட்சி மன்றத் திறப்பு விழா ; 6 மணி: சோமனூர்—பொது மக்கள் வரவேற்பு; இரவு 8-30 மணி : பல்லடம்--பொதுமக்கள் வரவேற்பு.